**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 49/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-3 |
| Name | : | Mr. Sivaperumal |
| Father Name | : | Duraisamy |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 27 |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2024.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்
**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது அங்காளம்மன் முதல் வீதியில் குடியிருக்கிறேன். நான் கிரேன் வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரியை தெரியும். அவர் என்னிடம் டிரைவராக வேலை செய்து வந்தார். 2023 வருடம் ஒரு நாள் எதிரி ராஜசேகர் என்பவருக்கு சொந்தமான பைக்கை என்னிடம் கொடுத்திருந்தார். அதை எதிரி எடுத்துச்சென்றார்.பின்னிட்டு அவர் வரவில்லை. அதன்பிறகு ஒரு நாள் காவல் நிலையத்தில் இருந்து ஒரு பைக் சம்மந்தமாக விசாரணைக்கு வந்து பைக் மற்றும்

எதிரியை பற்றி விசாரித்தார்கள். பைக் என் வசம் இருந்தது என்றும் எதிரி என்னிடம் டிரைவராக இருந்தார் என்றும் சொன்னேன். போலீசார் எதிரி மேற்படி பைக்கில் சென்று ஒரு பெண்ணை ராடால் அடித்து பேக்கை பிடிங்கி சென்றதாக வழக்கு இருப்பதாக கூறி என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் கூறும் பைக்கின் பதிவு சான்று யார் பெயரில் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. நான் அந்த பைக்கை வைத்திருந்ததற்கு அதன் உரிமையாளரிடம் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. பைக் என்னிடம் இருந்தது என்று காண்பிக்க போலீசார் ஆவணம் எதும் பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் வழக்கு பைக்கிற்கும் சம்பந்தம் எதுவும் இல்லை என்றும் எதிரியிடம் அந்த பைக்கை கொடுக்கவில்லை என்றும் எதிரி மேற்படி பைக்கில் சென்று பெண்ணை அடித்து பேக்கை பிடிங்க வில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் 20.12.2023. போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. பைக் என்னிடம் இருந்திருந்தால் பைக்கின் RC book மற்ற ஆவணங்களின் நகல்களையாவது நான் வைத்திருப்பேன் என்றும் என்னிடம் பைக் எதுவும் இல்லை என்பதால் தான் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை மேற்படி பைக் யாருக்கு சொந்தமானது என்றும் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. போலீசார் சொன்னதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.08.13 16:10:12 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி(FAC),
திருப்பூர்.

**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 49/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-4 |
| Name | : | Mr. Rajasekaran |
| Father Name | : | Ramajeyam |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 39 |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2024.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்
**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் திருப்பூர் அங்காளம்மன் தெருவில் குடியிருந்து கறிக்கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.3 ஐ தெரியும். அவர் எனக்கு பழக்கமானவர். நான் TN 39 BS 0856 என்ற இருசக்கர CD 100 வாகனத்தை ஓட்டிக்கொண்டிருந்தேன். குடும்ப கஷ்டம் காரணமாக அதை அ.சா.3 யிடம் ரூ. 10,000 க்கு அடமானம் வைத்தேன். பின்னிட்டு ஒரு நாள் போலீசார் அந்த வண்டி என்னுடையதா என்று விசாரித்தார்கள் நான் ஆமாம் என்று சொன்ன சமயம் முத்தனம்பாளையம் ரோடில் மேற்படி சதீஸ் ராடு எடுத்து

போலீசார் விசாரித்தார்கள். மேற்படி வண்டியை நான் ஒரு இடைத்தரகரிடம்இருந்து வாங்கினேன். வேறு ஒரு நபரின் பெயரில் இருப்பதால் நான் அதை மனு போட்டு வாங்கவில்லை.

2. மேற்படி வாகனத்தை நான் காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் சொன்னேன். போலீசார் விசாரித்தனர்.

<u>எதிர் தரப்பு கு.வி</u>

1. வாகனத்தின் RC புத்தகம் யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. நான் வண்டியை யாரிடம் இருந்து எவ்வளவு தொகைக்கு வாங்கினேன் என்று போலீஸ் விசாரணையில் ஆவணம் கொடுத்தேனா என்றால்இல்லை. நான் அந்த வண்டியை அ.சா.3 யிடம் அடமானம் வைத்தேன் என்பதை காண்பிக்க போலீசாரிடம் ஆவணம் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி வாகனத்தின் மூலமாக சென்று எதிரி ராடால் யாரோ ஒருவரை அடித்து விட்டதாக போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி வண்டிக்கும் எனக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றும் போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.08.13 16:10:20 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி(FAC),
திருப்பூர்.

**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**

**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 49/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-5 |
| Name | : | Mr. Karthikeyan |
| Father Name | : | Ramasamy |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | VAO |
| Religion | : | |
| Age | : | 38 |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2024.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்

**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூர் நல்லூர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2.12.2023 அன்று எங்கள் கிராமத்தில் ஒரு சொத்தின் நான்கு எல்லையை சரி பார்ப்பதற்காக நானும் கிராம உதவியாளர் செந்தில் குமாரும் சென்று கொண்டிருந்தோம். எங்கள் பணியை முடித்து திரும்பி வரும்போது. நல்லூர் HP petrol bunk அருகில் சிவா கிரேன் அருகில் காவல் ஆய்வாளர் மற்றும் போலீசார் விசாரணை

நடத்தி கொண்டிருந்தார்கள். நான் சென்று பார்க்க சதீஸ்குமார் என்பவர் 3 கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளார் என்று விசாரணை செய்து கொண்டு இருந்தார்கள்.

2. 2010 – ம் ஆண்டு ஒரு கொலை வழக்கு பற்றியும் 2023 வருடம் ஒரு பெண் மற்றும் ஒரு ஆண் அடித்துள்ளதாக சொன்னார். போலீசார் மேற்படி சதீஸிடம் கேட்க அவர் அதை ஒத்துக்கொண்டார். போலீசார் சதீஸ் சொன்ன வாக்குமூலத்தை குறித்துக்கொண்டார்கள். போலீசார் அருகில் உள்ள காவல் நிலையம் சென்று குறித்த கொண்ட சங்கதிகளை டைப் செய்து கொண்டுவந்தார்கள். அதில் நான் கிராம உதவியாளரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். பின்னிட்டு போலீசார் புதுப்பாளையம் டாஸ்மாக் அருகே அழைத்து சென்று முட்புதரில் pink colour கேன்பேக் ஒன்றையும் IOB cheque book இரண்டையும் தாராபுரம் ரோடு நெசவாளர் காலனிக்கு அழைத்து சென்று கொலை நடந்த சமயம் லூங்கி ஒன்றையும் brown கலர் சட்டை ஒன்றையும் எடுத்துக்கொடுத்தார். அவ்வாறு கைப்பற்ற லுங்கி மற்றும் சட்டை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். லுங்கி ச.பொ. 4 மற்றும் டி சட்டை ச.பொ. 5 ஆகும். CD 100 red colour இரு சக்கர வாகனம் TN 38 BS 0856 யும் கைப்பற்றினார்கள். நான் மேற்படி பொருட்களை கைப்பற்றிய சமயத்தில் உடனிருந்து சொத்துக்களை கைப்பற்றிய சமயத்தில் கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் 3 கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்த என்னுடையது தான். எதிரியிடம் இருந்து பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ–2 ஆகும். கைப்பற்றுதல் மகஜர்கள் அ.சா.ஆ–3 முதல் 5 ஆகும். சம்பந்தமாக போலீசார் விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 2.12.2023 அன்று நான் நல்லூர் கிராம நிர்வாக அதிகாரியாக தான் இருந்தேன். எனது அலுவலகம் நல்லூர் காவல் நிலையம் அருகே உள்ளது. நான் அலுவலகத்திற்கு வழக்கமாக காலை 9 மணிக்கு வருவேனா என்றால் ஆமாம். புதியதாக பணியேற்றதால் boundary பார்ப்பதற்காக காலை 8 மணிக்கே வந்துவிட்டேன். சிவா கிரேன் கம்பெனி முத்தனம்பாளையம் ரோடில் உள்ளது என்றால் இல்லை நல்லூர் ரோடில் உள்ளது. நானும் எனது உதவியாளரும் எந்த வாகனத்தில் சென்றோம் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். போலீசார்

விசாரிக்கும்போது விசாரணைக்காக என்னை போலீசார் நிறுத்தினார்கள் என்று சொல்லவில்லை என்றால் ஆமாம்.

2. நான் சொல்லும் இடமானது போக்குவரத்து மற்றும் மக்கள் நெரிசல் மிகுந்த பகுதி என்றால் சரிதான். கிரேன் கடையில் எப்போழுதும் ஆட்கள் இருப்பார்கள் என்றால் ஆமாம். நான் அங்கு சென்ற சமயம் கிரேன் கம்பெனியில் உரிமையாளரோ அல்லது வேலையாட்களோ இருந்தார்களா என்றால் இல்லை . போலீசார் மட்டும் இருந்தார்கள். துண்டு சீட்டில் யார் குறித்துக்கொண்டதாக சொல்கிறேன் என்றால் ஒரு எஸ் ஐ குறித்துக்கொண்டார். போலீசார் எத்தனை மணியில் இருந்து அங்கு இருந்தார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் 6 மணியில் இருந்து இருந்ததாக தெரிந்துகொண்டேன். நான் 8.15 மணிக்கு சென்றேன்.

3. போலீஸ் நிலையத்தில் யார் computer ல் டைப் செய்தார்கள் print எடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். நான் காவல் நிலையத்திற்கு எத்தனை மணக்கு சென்றேன் என்றால் அங்கு செல்லவில்லை. நான் அலுவலகத்தில் இருந்து எத்தனை மணிக்கு சென்றேன் 9 மணிக்கு சென்றேன் மறுபடியும் போலீசார் என்னை அழைத்தார்கள். எந்த போன் நம்பருக்கு போலீசார் என்னை அழைத்தார்கள் நினைவில்லை. யார் அழைத்தார்கள் என்றும் தெரியவில்லை. நல்லூரில் இருந்து புதுப்பாளையம்பிரிவு எவ்வளவு தூரம் என்றால் 2 கி.மீ. இருக்கும். நான் சொல்வது தவறு என்றும் மேற்படி புதுப்பாளையம்பிரிவு 5 கி.மீ தூரம் என்றால் சரியல்ல. நானும் உதவியாளரும் எந்த வாகனத்தில் புதுப்பாளையம்பிரிவு சென்றோம் என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால்ஆமாம். முள்காடு ஏக்கர் கணக்கில் பங்கு உள்ளது என்றால் ஆமாம். நான் சொல்லும் முள்காடு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் தற்போது நினைவில்லை. அங்கு ஆட்கள் நடமாட்டம் இருந்ததா என்றால்நினைவில்லை. முள்காடு அருகே ரோடு இருந்ததா என்றால் நினைவில்லை.

4. முள்காட்டிற்கு வாகனத்தில் சென்றோமா நடந்து சென்றோமா என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் 9 மணிக்கு அலுவலகம் சென்றபோது எவ்வளவு நேரம் கழித்து போலீசார் தகவல் சொன்னார்கள் என்றால் சுமார் 45 நிமிடம் இருக்கும். அழைத்தன் பேரில் எங்கு சென்றேன் என்றால் போலீசார் தான் அழைத்து சென்றார்கள் புதுப்பாளையம்பிரிவு என்று சொன்னார்கள் எனக்கு சரியாக தெரியவில்லை. கைப்பற்றியதாக கூறும் பொருளில் போலீசார் சீல் வைத்தார்களா என்றால் இல்லை.

5. நான் கையெழுத்து போட்ட ஆவணங்கள் யார் தயாரித்தார்களா என்றால் எஸ். ஐ தான் என்னிடம் கையெழுத்து பெற்றார். போலீசார் ஸ்டேசனுக்கு சென்று டைப் செய்து வந்தார்கள். நான் கையெழுத்து செய்த ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எங்களது அலுவலக பணி அல்லாமல் வேறு பணிக்கு சென்றால் எனது உயர் அதிகாரிக்கு தகவல் தெரிவிக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு தகவல் தெரிவித்தாக ஆய்வாளரின் விசாரிணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மறுபடியும் காவல் துறை அழைத்தால் மேல் அதிகாரியின் அனுமதி பெற்று செல்லவேண்டும். அவ்வாறு அனுமதி பெறவில்லை என்றால்போன் மூலமாக நான் வட்டாசியரிடம் தகவல் தெரிவித்தேன். நான் வேறு பணிக்காக வெளியே சென்றால் என் அலுவலகத்தில் உள்ள அறிவிப்பு பலகையில் அது சம்பந்தமாக எழுதவேண்டும் என்றால் சரிதான்.

6. அவ்வாறு அறிவிப்பு பலகையில் எழுதி வைத்தபிறகு வேறு பணிக்காக சென்றேன் என்று போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். நான் ஒவ்வொரு நாளும் செய்யகூடிய பணிகள் குறித்த தினசரி நாட்குறிப்பில் பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன வாகனமானது ஏற்கனவே காவல் நிலையத்தில் இருந்தது என்றும் நான் சொல்வது போல் புதுப்பாளையம் எதுவும் செல்லவில்லை என்றும் அங்கு போலீசார் எதிரியிடம் இருந்து கேன் பேக் செக்

புத்தகம் கைப்பற்றவில்லை என்றும் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அப்போது எதிரி அங்கு இருக்கவும்இல்லை நான் பார்க்கவும் இல்லை, எதிரியை சந்தேகத்தின் பேரில் போலீசார் காவல் நிலையத்தில் பிடித்து வைத்திருந்தாகவும், ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் நானும் எனத உதவியாளரும் கையெழுத்து செய்ததாகவும், எங்கள் முன்பாக எந்த விதமான ஆவணங்களும் ஏற்படுத்தவில்லை என்றும், காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்த செய்துவிட்டு, போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன், நான் சொல்வது போல் எந்த வித நிகழ்வும் நடைபெற வில்லை என்றால் சரியல்ல. எதிரியை முதன் முதலில் இங்கு தான் பார்க்கிறேன். இதற்கு முன்பாக நான் அவரை பார்த்ததே யில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S RAMACHANDRAN

Digitally signed by S RAMACHANDRAN
Date: 2024.08.13 16:10:34 +0530

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி(FAC),
திருப்பூர்.

**DEPOSITIION OF WITNESS**

**(CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )**
**IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR**

**Case No. S.C. 49/2024**

| | | |
|---|---|---|
| Deposititon of Witness for | : | PW-6 |
| Name | : | Mr. senthilkumar |
| Father Name | : | yovan |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | VAO -Assistant |
| Religion | : | |
| Age | : | 44 |

Solemnly afirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.08.2024.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்
**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது திருப்பூர் நல்லூரில் குடியிருந்து நல்லூர் கிராம உதவியாளராக பணிளாற்றி வருகிறேன். அ.சா. 5 கிராம நிர்வாக அதிகாரி. கடந்த 2.12.2023 அன்று நானும் அ.சா. 5 ம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்துகொண்டிந்தோம். நல்லூர் HP petrol bunk அருகே வந்து கொண்டிருந்தபோது காவல் ஆய்வாளர் மற்றும் போலீசார்சதீஸ் என்பவரிடம் விசாரித்து கொண்டிருந்தார்கள். நாங்கள் வண்டியை நிறுத்தி வந்து போலீசார் என்னவென்று விசாரிக்க எதிரி ஏற்கனவே கொலை செய்து இருந்தாகவும்

அதை ஒத்துக்கொண்டதால் விசாரித்து கொண்டு இருப்பதாக சொன்னார்கள். போலீசார் எங்கள் இருவரிடம் சாட்சி கையொப்பம் போட சொன்னார்கள் சாட்சி கையெழுத்த நானும் போட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வதாக உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். பின்னிட்டு போலீசார் புதுபாளையம் பிரிவு அருகே அழைத்துசென்று அங்கு இருந்த ஒரு பேக்கையும் செக் புக்கையும் எடுத்த கொடுத்தார். பின்னிட்டு நாங்கள் இருவரும் அலுவலகம் வந்துவிட்டோம். அது சம்மந்தமாக நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம்.

2. என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ–3 முதல் 5 மகஜர்களில் உள்ள 2 வது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். ஆஜர் எதிரி தான் நான் சொல்லும் சதீஸ். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. அலுவலகத்திற்கு எங்கு சென்று வந்து கொண்டிருந்தோம் என்றால் அ.சா. 5 பணியில் சேர்ந்து 2 நாட்கள் ஆனதால் கிராம ஆய்விற்காக விஜயாபுரம் சென்றோம். எத்தனை மணிக்கு வந்தோம் என்றால் காலை 7.30 இருக்கும். காவல் நிலையம் ஒட்டி எங்கள் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். HP petrol bunk எங்கள் அலுவலகத்தில் இருந்து மேற்கே ரோடின் தென்புறத்தில் சுமார் 500 மீட்டர் தூரத்தில் உள்ளது. சிவா கிரேன் கம்பெனி பெட்ரோல் பங்க் அருகில் உள்ளது. எதிரியை அன்றே தினத்திற்கு முன்பாக தெரியாது என்றால் ஆமாம். எதிரியின் பெயர் எப்படி எனக்கு தெரியும் என்று போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் எங்கு வைத்து யாரால் தயாரிக்கப்பட்டது என்று தெரியவில்லை.

3. HP petrol bunk இருந்து நேராக புதுப்பாயைம் சென்றுவிட்டோம் என்றால் அலுவலகம் வந்து சென்றுவிட்டோம். அலுவலகத்திற்கு 9.15 மணிக்கு வந்தோம். அலுவலகத்தில் 10 நிமிடம் இருந்தோம். அலுவலகத்தில் இருந்து எத்தனை மணிக்கு கிளம்பி சென்றோம் என்றால் சரியாக நேரம் தெரியவில்லை. எங்கள் அலுவலகத்தில் இருந்து புதுப்பாளையம் எவ்வளவு தூரம் என்றால் 5 கி.மீ. போலீஸ் விசாரணையில் எந்த வாகனத்தில் புதுப்பாளையம் சென்றோம் என்று சொல்லவில்லை என்றால் ஆமாம்.நான் சொன்னது போல் HP petrol bunk அருகே செல்லவில்லை என்றும், அங்கு எதிரி இருக்கவில்லை என்றும், எதிரி போலீசாரிடம் எந்த வித வாககுமூலமும்

கொடுக்கவில்லை என்றும் நாங்கள் புதுப்பாளையம் செல்லவில்லை என்றும் அங்கு எதிரி பேக் மற்றும் செக் புத்தகத்தை எடுத்து ஆஜர் படுத்தவில்லை என்றும் போலீசார் காவல் நிலையத்தில் ஏற்கனவே எதிரியை பிடித்து வைத்து அங்கு தயாரித்து வைத்திருந்த அனைத்து ஆவணங்களிலும் போலீசார் கேட்டுக்கொண்டதற்காக சாட்சி கையெழுத்த போட்டதாகவும் தற்போது தான் முதன் முதலில் எதிரியை நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றும் போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் நான் சொன்னதுபோல் எந்த வித சம்மந்தமும் நடைபெற வில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

கூடுதல் உதவி அமர்வு நீதிபதி(FAC),
திருப்பூர்.